بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/04/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### திருக்குர்ஆன், மாநபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் சில துஆக்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ - أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ-

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த ஜுமுஆவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் துஆ எனும் தலைப்பை எடுத்துரைத்தேன். இதுவே இன்றும் தொடர்கிறது. 'நான் முஸ்தர் உடைய துஆக்களைக் கேட்கிறேன்' என்று அல்லாஹ் கூறுகிறான். முஸ்தர் என்பது அழுது மன்றாடுதலை மட்டுமே குறிக்கவில்லை. மாறாக, எல்லா வழிகளும் அறுபட்ட நபரைக் குறிக்கிறது. எனவே, நாம் துஆ செய்வதற்காக அல்லாஹ்வுக்கு முன் குனியும் போது, எத்தகைய நிலையை உருவாக்கிக் கொண்டு குனிய வேண்டும் என்றால், 'உன்னைத் தவிர எங்களுக்கு யாரும் இல்லை; நாங்கள் உன்னையே சார்ந்திருக்கிறோம்; உன்னையே நம்பியிருக்கிறோம்' என்று அல்லாஹ்வுக்கு முன் துஆ செய்ய வேண்டும்.

ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தைத் தம்முடைய மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, நீங்கள் உங்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால், அழுது மன்றாடும் நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

இப்பொழுது நான் சில திருக்குர்ஆன் துஆக்கள், சுன்னத்தான துஆக்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்கள் ஆகியவற்றையும் எடுத்துச் கூறுவேன். அவற்றின்மீது நிரந்தரமாக கவனம் செலுத்த வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முதலாக சூரா ஃபாத்திஹா ஆகும். தொழுகை போகவும் அதை மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டே இருக்க வேண்டும். அதை மிகவும் கவனமாகப் புரிந்து படிப்பதனாலும், ஓதிக் கொண்டே இருப்பதனாலும் மனிதன் அல்லாஹ்வுக்கு அருகில் வந்து விடுகிறான்.

**பிறகு, திருக்குர்ஆனின் துஆக்கள்:**

رَبَّنَاۤ اٰتِنَا فِی الدُّنۡیَا حَسَنَۃً وَّ فِی الۡاٰخِرَۃِ حَسَنَۃً وَّ قِنَا عَذَابَ النَّارِ ﴿۲۰۲﴾

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் வெற்றியினை வழங்குவாயாக; மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக). எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. **(2:202)**

பிறகு, இந்த துஆவையும் இன்றைய நாள்களில் மிக அதிகமாகவும் அழுது மன்றாடி செய்ய வேண்டும்:

رَبَّنَآ اَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرًا وَّثَبِّتۡ اَقۡدَامَنَا وَانۡصُرۡنَا عَلَى الۡقَوۡمِ الۡكٰفِرِيۡنَ ﴿۲۵۱﴾

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்குச் சகிப்புத்தன்மையைத் தந்தருள்வாயாக, மேலும், எங்கள் பாதங்களை உறுதிப்படுத்தி வைப்பாயாக; மேலும், நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. **(2:251)**

பிறகு, இந்த துஆவையும் மீண்டும் மீண்டும் ஓத வேண்டும்:

رَبَّنَا لَا تُؤَاخِذۡنَاۤ اِنۡ نَّسِيۡنَاۤ اَوۡ اَخۡطَاۡنَا ۚ رَبَّنَا وَلَا تَحۡمِلۡ عَلَيۡنَاۤ اِصۡرًا كَمَا حَمَلۡتَهٗ عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِنَا ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلۡنَا

مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعۡفُ عَنَّا ۗ وَاغۡفِرۡ لَنَا ۗ وَارۡحَمۡنَا ۗ اَنۡتَ مَوۡلٰٮنَا فَانۡصُرۡنَا عَلَى الۡقَوۡمِ الۡكٰفِرِيۡنَ ﴿۲۸۷﴾

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களைத் தண்டிக்காதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனைச் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத (பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்களைப் பொறுத்தருள்வாயாக; எங்கள் மீது கருணை காட்டுவாயாக; நீயே எங்கள் எஜமானன்: ஆகவே, நிராகரிக்கும் கூட்டத்தினருக்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக. **(2:287)**

பிறகு, ஈமான் உறுதியடைவதற்கு இந்த துஆவையும் அதிகம் ஓத வேண்டும்:

رَبَّنَا لَا تُزِغۡ قُلُوۡبَنَا بَعۡدَ اِذۡ هَدَيۡتَنَا وَهَبۡ لَنَا مِنۡ لَّدُنۡكَ رَحۡمَةً ۚ اِنَّكَ اَنۡتَ الۡوَهَّابُ ﴿۹﴾

பொருள்: எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர், எங்கள் உள்ளங்களைக் கோணலாக்காதிருப்பாயாக. மேலும், எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். **(3:9)**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த சில துஆக்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்:-*

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தொழுகையில் கேட்கும் இந்த துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள்:

اَللّٰهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ، فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِّنْ عِنْدِكَ،

وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ۔

பொருள்: அல்லாஹ்வே! நான் என் ஆன்மாவின் மீது மிக அதிகமாக அநீதி இழைத்துள்ளேன். உன்னைத் தவிர எவராலும் பாவங்களை மன்னிக்க முடியாது. எனவே, நீ உன் புறமிருந்து என்னை மன்னித்தருள்வாயாக! என் மீது கருணை புரிவாயாக! நிச்சயமாக நீயே அதிகமாக மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை புரிபவனும் ஆவாய். **(புகாரீ: கிதாபுல் அதான். பாபுத் துஆயி கப்லஸ்ஸலாமி)**

கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் கவலை ஏற்படும் போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்வார்கள்:

يَا حَيُّ يَا قَيُّوْمُ بِرَحْمَتِكَ أَسْتَغِيْثُ

பொருள்: உயிருள்ளவனே! மற்றவர்களை உயிருடன் இருக்கச் செய்பவனே! நிலைத்திருப்பவனே! மற்றவர்களை நிலைத்திருக்கச் செய்பவனே! உனது கருணையால் எனக்கு உதவி புரிவாயாக! **(மிஷ்காத்துல் மஸாபீஹ்: கிதாபுத் தஃவாத்)**

எனவே, இந்த துஆக்கள்தான் நம்முடைய சொந்த வாழ்விலும் மாற்றங்களைக் கொண்டு வரும். இவை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த துஆக்கள் ஆகும். குறைந்தபட்சம் இவற்றின் மொழியாக்கத்தை மனனம் செய்து அல்லது இதன் கருத்தைப் புரிந்து இவ்வாறு நாமும் துஆக்கள் செய்ய வேண்டும்.

பிறகு, புகாரீயில் இவ்வாறு ஒரு துஆ கிடைக்கிறது:

اَللّٰهُمَّ اجْعَلْ فِي قَلْبِي نُوْرًا، وَفِي بَصَرِي نُوْرًا، وَفِي سَمْعِي نُوْرًا، وَعَنْ يَمِيْنِي نُوْرًا، وَعَنْ يَسَارِيْ نُوْرًا،
وَفَوْقِي نُوْرًا، وَتَحْتِي نُوْرًا، وَأَمَامِيْ نُوْرًا، وَخَلْفِيْ نُوْرًا، وَاجْعَلْ لِيْ نُوْرًا

பொருள்: அல்லாஹ்வே! எனது உள்ளத்தில் ஒளியை வைத்திடுவாயாக! எனது அகப் பார்வையிலும் புறப் பார்வையிலும் ஒளியை வைத்திடுவாயாக! எனது செவித்திறனில் ஒளியை வைத்திடுவாயாக! எனது வலப்புறமும் ஒளியை வைத்திடுவாயாக! எனது இடப்புறமும் ஒளியை வைத்திடுவாயாக! மேலும் ஒளியிருக்கட்டுமாக! கீழும் ஒளியிருக்கட்டுமாக! எனக்கு முன்னாலும் ஒளியை வைத்திடுவாயாக! எனக்குப் பின்னாலும் ஒளியை வைத்திடுவாயாக! எனக்கு ஒளியே ஒளியாக்கிடுவாயாக! **(புகாரீ)**

பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒரு துஆவைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُبِكَ مِنْ مُنْكَرَاتِ الْأَخْلَاقِ وَالْأَعْمَالِ وَالْأَهْوَاءِ

பொருள்: அல்லாஹ்வே! நான் தீயொழுக்கத்தை விட்டும், தீய செயல்களை விட்டும், தீய ஆசைகளை விட்டும் உனது அடைக்கலத்தை நாடுகிறேன். **(திர்மிதீ)**

இது மிகவும் சுருக்கமான துஆவாகும். மனிதன் இதை வேதனையுடன் செய்தால், பல்வேறு தீமைகளும் அகன்று விடும்; நன்மைகள் உருவாகி விடும்.

பிறகு, பகைவர்களின் தீய எண்ணங்களுக்கு எதிராக இந்த துஆ உள்ளது:

اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ، وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: அல்லாஹ்வே! அவர்களுடைய நெஞ்சங்களுக்கு முன்னால் நாங்கள் உன்னை நிறுத்துகிறோம். மேலும், அவர்களுடைய தீங்கிலிருந்து உனது பாதுகாப்பில் வருகிறோம். **(அபூ தாவூத்)**

இந்த துஆவையும் இன்றைய நாள்களில் அஹ்மதிகள் மிக அதிகமாக ஓத வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை பகைவர்களின் தீங்கிலிருந்து பாதுகாத்து வைப்பானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில துஆக்களை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்:-*

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மவ்லவி நஸீர் ஹுஸைன் சாஹிப் சகா தெஹ்லவீ அவர்களது கடிதத்துக்குப் பதில் அளிக்கையில், அவர்களுக்கு (தொழுகையில்) மனதளவில் ஆஜராகும் நிலையைப் பெறுவதற்கான வழிமுறையை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதினார்கள்:

“அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ. வழிமுறை இதுவே ஆகும். அதாவது, தொழுகையில் உங்களுக்காக துஆ செய்து கொண்டே இருங்கள். மேலோட்டமான, கவனமற்ற தொழுகையில் மகிழ்ச்சியடைந்து விடாதீர்கள். மாறாக, இயன்ற அளவுக்கு கவனமாக தொழுகையை நிறைவேற்றுங்கள். கவனம் பிறக்கவில்லை என்றால், ஐவேளை ஒவ்வொரு தொழுகையிலும் இறைவனுக்கு முன்னிலையில் ஒவ்வொரு ரக்அத்துக்குப் பிறகும் எழுந்து நின்று இவ்வாறு துஆ செய்திடுங்கள்:

இறைவா! வல்லமையும் கம்பீரமும் மிக்கவனே! நான் பாவியாவேன். பாவம் எனும் நஞ்சு எந்த அளவுக்கு எனதுள்ளத்திலும் நாடி நரம்புகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றால், எனக்கு உருக்கமும் தொழுகையில் மனதளவில் ஆஜராகும் நிலையும் கிடைப்பதில்லை. நீ உனது அருளாலும் கருணையாலும் என்னுடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக. என்னுடைய தவறுகளையும் குறைகளையும் மன்னித்து விடுவாயாக. எனது உள்ளத்தை மென்மையாக்கி விடுவாயாக. எனதுள்ளத்தில் உனது மகத்துவம், உன் மீதான அச்சம் மற்றும் உன் மீதான அன்பை அமர்த்தி விடுவாயாக. அதன் மூலமாக எனது உள்ளத்தின் கடுமை அகன்று தொழுகையில் மனதளவில் ஆஜராகும் நிலை கிடைக்கட்டுமாக.”

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் மிக அதிகதிகமாக துரூது ஷரீஃப் ஓதுவதும் மிகவும் அவசியமாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நாம் நம்முடைய உள்ளத்திலிருந்து இந்த துஆக்களை செய்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! உங்கள் தாய்மொழியிலும் துஆக்கள் செய்யுங்கள். எவர்களுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்த துஆக்கள் வருகின்றனவோ அந்த உண்மையான மனவேதனை மற்றும் அழுது மன்றாடுபவராக மாறி துஆக்கள் செய்யுங்கள். ரமலானின் அருள்களை எப்பொழுதும் நிலைத்திருக்கச் செய்வதற்காகவும் துஆ செய்யுங்கள்.

நாமும் நம்முடைய சந்ததிகளும் போர்கள் எனும் நெருப்பில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும், அதற்குப் பிறகுள்ள பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். இப்பொழுது இந்தப் போர் முன்னால் இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் சொல்வதாயின், உலகப் போர் ஆரம்பித்தே விட்டது. ஆனால், உலகத்தின் ஆட்சியாளர்களுக்கு அதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லை. இத்தகைய நிலையில், அவற்றின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்கு அஹ்மதிகள் தம்மை இறைவனுக்கு முன்னால் கொண்டு செல்வதற்கும் துஆக்களில் மன்றாடுதலை உருவாக்குவதற்கும் அதிகத் தேவை இருக்கிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் மனிதத்தைக் காப்பாற்றுவானாக! நமக்கு துஆக்களிலும் நம்முடைய உரிமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! (ஆமீன்)

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)